# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 28 வியாழக்கிழமை 14.11.2024 கதிர் 417



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




# அமைதியான தேர்தல் ஆணைக்குழு மகிழ்ச்சி

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தல் வழமையைவிட மிகவும் அமைதியாகவும், சுமுகமாகவும் நடந்து முடிந்துள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, சுமுகமான முறையில்தேர்தலை நடாத்துவதற்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7:00 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4:00 மணிக்கு நிறைவடைந்தது. வாக்களிப்பின் போது பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை. வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரும், இரண்டு வாக்களிப்பு நிலைய அலுவலர்களும் நோயுற்றுச் சாவடைந்துள்ளனர் எனப் பொலீஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தலின் தபால்மூல வாக்குகள் எண்ணும் பணி இன்று பிற்பகல் 4.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்பட்டு, வாக்கெண்ணும் நிலையங்களில் கையளிக்கப்பட்ட பின்னர் முன்னிரவு 7.50 அளவில் வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனவும், முதலாவது தொகுதி முடிவுகள் நள்ளிரவு முதல் தேர்தல்கள் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது, (ஐ)

## வாக்குச் சீட்டைக் கிழித்தெறிந்தவர் பொலீஸாரால் கைது!

கொழும்பு, நவ. 14

வாக்களிப்பு நிலையத்தினுள் வாக்குச் சீட்டைக் கிழித்த நபர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாத்துவ, பொதுப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாக்களிப்பு நிலையத்தினுள் வந்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்குச் சீட்டைப் பெற்றுக் கொண்ட பின், விருப்பு வாக்கு எண்களை மறந்துவிட்டதாகக் கூறி வாக்களிப்பு நிலையத்தை விட்டு வெளியேற அங்கிருந்த அதிகாரிகளிடம் அனுமதி கோரினார். ஆனால், அதிகாரிகள் அனுமதி வழங்க முடியாது என்று கூறியதால் அவர் வாக்குச் சீட்டை கிழித்து எறிந்ததாக வாத்துவ பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-05)



இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலில், ஜனாதிபதி அனுரகுமார தசநாயக்க இன்று காலை மருதானை பஞ்சிகாவத்த அபயசிங்காராமவில் வாக்களித்த போது.

## வாக்களிப்பு வீதம்

கொழும்பு, நவ. 14

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத்தேர்தலில் நிர்வாக மாவட்ட ரீதியாக பதிவாகியுள்ள வாக்கு சதவீதம் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. முற்கொண்டு கிடைத்த புள்ளி வவரங்களின் படி கிடைத்த வாக்களிப்பு வீதம் வருமாறு:

| | |
|---|---|
| கொழும்பு | - 65% |
| நுவரெலியா | -68% |
| குருநாகல் | -64% |
| மட்டக்களப்பு | - 61% |
| மாத்தறை | -64% |
| புத்தளம் | -56% |
| அனுராதபுரம் | - 65% |
| பதுளை | -66% |
| மன்னார் | - 70% |
| திருகோணமலை | -67% |
| முல்லைத்தீவு | - 63% |
| பொலனறுவை | - 65% |
| இரத்தினபுரி | - 65% |
| காலி | - 64% |
| யாழ்ப்பாணம் | - 59% |
| ஹம்பாந்தோட்டை | -60% |
| மாத்தளை | - 67% |
| கேகாலை | - 65% |
| மொனராகலை | - 63% |
| வவுனியா | -65% |
| கிளிநொச்சி | - 62% |
| கண்டி | - 62% |
| களுத்துறை | - 64% |
| அம்பாறை | - 62 % |
| கம்பஹா | - 66% |

# அவசரப்பட்டுத் தேர்தல் முடிவுகளை வெளியிட வேண்டாமென கோரிக்கை!

கொழும்பு, நவ. 14

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் குறித்த உத்தியோக பூர்வ முடிவுகள் வெளிவரும் வரை தேர்தல் முடிவுகளை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுத் ஊடகங்கு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளை வெளியிடுவது தொடர்பான தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஊடகங்களுக்கான வழிகாட்டல் கையேட்டின் படி செயற்படுமாறு இன்று வெளியிட்டுள்ள அந்த அறிவித்தலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# போதைப் பொருள் கொண்டுவந்த ஆழ்கடல் படகுடன் 6 பேர் கைது!



கொழும்பு, நவ. 14

இலங்கைக்கு மேற்கே ஆழ்கடலில் இலங்கைக் கடற்படையினர் இன்று மாலை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, போதைப பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் பல நாள் மீன்பிடிப் படகுடன் சந்தேக நபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த பல நாள் மீன்பிடிக் கப்பலில் சுமார் 60 கிலோகிராம் போதைப்பொருள் இருக்கலாம் என கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்.

கைதான சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள்மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கரைக்குகொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)





நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் இறுதித் தொகுதி வாக்குப் பெட்டிகளும் யாழ். மாவட்ட தேர்தல் மத்திய நிலையத்தை வந்தடைந்தன. நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களின் வாக்குப்பெட்டிகள் இலங்கைக் கடற்படையின் உலங்கு வானூர்தியில் எடுத்து வரப்பட்டு, யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரும், பதில் அரசாங்க அதிபருமான ம. பிரதீபனிடம் கையளிக்கப்பட்டன. (ஐ)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

# தேர்தல் முடிவுகள் அறிவிப்பது குறித்து எச்சரிக்கை

கொழும்பு, நவ 14

தேர்தல் முடிவுகளை அறிவிப்பது தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு இது தொடர்பிலான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த தேர்தல்களின் போது சில ஊடக நிறுவனங்கள், பிரதேச தேர்தல் வாக்கு எண்ணும் நிலையங்களிலிருந்து அதிகாரபூர்வமற்ற தகவல்களை பெற்றுக்கொண்டு பெறுபேறுகளை வெளியிட்டுள்ளனர்.

இதனால் தேர்தல் பெறுபேறுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கை சீர்குலைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே அதிகாரபூர்வமற்ற வகையில் தேர்தல் முடிவுகளை வெளியிட வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகாரபூர்வமற்ற தேர்தல் முடிவுகளை வெளியிடும் ஊடக நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

# வடக்கு மாகாணத்தில் விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்குப் பதிவுகள்






இலங்கை நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் இன்று காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்று வருகின்றது.

இதன் படி யாழ்ப்பாண மாவட்டத்தில் மு. ப 10.00 மணி நிலவரப்படி 16% வீதமான வாக்கு பதிவு இடம்பெற்றிருக்கின்றது.

அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்திலும் வாக்காளர்கள் காலை 7.00 மணி தொடக்கம் தமது ஜனநாயக கடமையினை மக்கள் ஆர்வத்துடன் நிறைவேற்றி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், இம்முறை 100,907 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்பு சுமூகமான முறையில் இடம்பெற்று வருவதுடன், தேர்தல் கடமைகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று காலை பத்து மணிவரை 23.23% வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேர்தல் நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வாக்கு பதிவுகள் இன்றையதினம் காலை 7 மணிக்கு ஆரம்பமாகிய நிலையில் மக்கள் உற்சாகமாக புதிய தலைவர்களை தெரிவு செய்ய அமைதியான முறையில் முல்லைத்தீவு மாவட்ட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்குரிய 137 வாக்களிப்பு நிலையங்களுக்கும் வாக்களிக்க தகுதிபெற்ற 86869 பேர் இன்றையதினம் வாக்களிக்க இருக்கின்றனர்.

அத்தோடு இந்த தேர்தல் பணிக்காக சுமார் 1500 மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள், 500 பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஈடுபட்டிருக்கின்றதுடன் தேர்தல் கடமையில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

மன்னார் மாவட்டத்தில் காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரையான நிலவர படி 98 வாக்களிப்பு நிலையங்களில் 21,784 வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இது மொத்த வாக்களிப்பில் 24 வீதமாகும் எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அதே நேரம் இதுவரை தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து இன்று வரை மன்னார் மாவட்டத்தில் 26 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளதாகவும் அதில் இன்றைய தினம் 6 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவை சுமூகமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுளளார்.

வன்னி மாவட்டம் மன்னார் தேர்தல் தொகுதியில் 98 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்புகள் இடம் பெற்று வருகின்றது.

காலையில் சற்று மந்த கதியில் வாக்களிப்புகள் இடம் பெற்றாலும் பின்னர் மக்கள் வருகை தந்து வாக்களிப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 90 ஆயிரத்து 607 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள நிலையில் கடந்த ஜனாதிபதி தேர்தலை பார்கிலும் காலை நிலவரபடி அதிகமான மக்கள் ஆர்வமாக வாக்களித்து வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

வவுனியாவில் சுமுகமான முறையில் வாக்களிப்பு இடம்பெறுவதுடன், இன்று காலை 10 மணி வரை 25 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவித்தாட்சி அலுவலருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவில் 22.74 வீதமும், மன்னாரில் 18.5 வீதமும் வாக்குகளும் பதிவாகியுள்ளது.

அந்தவகையில் மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தில் காலை 10 மணிவரை 22 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)



# கனவு





கனவு என்பது ஒவ்வொருவருவரும் கட்டணம் தராமல் காணும் காட்சிகள் கொண்ட பட தொகுப்பு, இந்த காட்சிகளில் அந்த ஒவ்வொருவரும் விருப்பபட்ட காட்சிகள் தான் வரும் என்பது உத்தரவாதமில்லை என்றாலும் ஏதேனும் ஒரு முறை அல்லது ஒரு நாள் அவர்கள் உள்மனதில் எழுந்த ஆசைகள், எண்ணங்கள் இவைகள் கூட அந்த காட்சிகளில் வெளிப்படலாம்

இந்த கனவை கண்டு விழித்த பின் அவர்களுக்கு அந்த கனவில் கண்டவைகள் சம்பந்தமில்லாதவைகள் போல் சில நேரங்களில் தோன்றினாலும், உண்மையில் அவர்கள் அந்த காட்சியை அல்லது நிகழ்வை திரைப்படம்,அல்லது ஏதேனும் ஊடகங்கள் வாயிலாகவோ அல்லது நேரிலோ என்றோ பார்த்தது அல்லது பிறர் சொல்ல கேட்டதாகவோ, இருந்திருக்க வேண்டும். காரணம் "அவரவர்கள் காணும் கனவு" என்பது அவர்கள் சம்பந்தபட்ட நிகழ்ச்சிகளே பெருமளவில் 'காட்சிகளாக' அவர்களுக்கு தோன்றும்.

இதை 'அறிவியல்' பூர்வமாக விக்கி பீடியா என்ன சொல்கிறது என்றால் கனவு என்பது 'ஒலிப்பு' என தமிழில் விளக்குகிறது. ஒருவர் தூங்கும் பொழுது அவரது மன படிமங்கள், காட்சிகள், உணர்வுகள், ஓசைகள், நிகழ்வுகளை குறிக்கிறது.கனவு காணும் பொழுது அவர்களது கண் அசைவுகளை காணப்படுவதில் இருந்து இவை அவதானிக்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், கனவு என்றால் என்ன? என்பது தொடர்பான முழுமையான அறிவியல் புரிதல் இன்னும் இல்லை. மூளையில் உள்ள நினைவு குறிப்புகளை ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தும் செயல்பாட்டின் விளைவாக இருக்கலாம். இது அனைத்து வகையான பாலூட்டிகளிடமும் காணப்படும் என்று தெரிவிக்கிறது.

என்றாலும் கனவு என்பது 'பாலூட்டி' வகையை சேராதவைகளிடமும் இருக்கும் என்பது இந்த கட்டுரையாளனின் எண்ணம். காரணம் தூங்கும் எந்த உயிரினமும் கனவு காண வாய்ப்பு இருக்கும் என்பதுதான். காரணம் தூக்கம் என்பது "ஓய்வு" என்றுதானே இருக்கும். அப்படி தூங்கும் போது உடலில் எல்லா உறுப்புக்களும் சற்று ஓய்வு நிலையில் இருக்க, அப்பொழுது அவர்களின் மூளையில் பதித்து வைக்கப்பட்டிருந்த நிகழ்வுகள், ஒன்றை ஒன்று தொடர்பு படுத்தி காட்சி படுத்த வாய்ப்பு இருக்குமல்லவா..?

கனவு ஏன் வருகிறது? என்னும் கேள்விக்கு அறிவியல் பூர்வமாக விளக்கம் ஒன்று தரப்படுகிறது. பொதுவாக சுநுஆ (சயிவை நலநு அழஎநஅநவெ) தூக்கத்தின் போது கனவுகள் ஏற்படுகின்றன, உறக்கத்தின் ஆழமான நிலை,விரைவான மற்றும் ஒழுங்கற்ற கண்களின் இயக்கம், மற்றும் சுவாசம், இதயதுடிப்பு இவைகளில் ஏற்படும் மாற்றங்கள்.

ஏன் கனவு வருகிறது? என்னும் கேள்விக்கு "கனவு என்பது கற்பனை மட்டுமல்ல, நினைவகம், மற்றும் உணர்ச்சிகள், ஆக்கபூர்வமான சிந்தனைகள், இவற்றின் சிக்கலான கலவை. நமது ஆன்மாவின் 'ஆழத்திற்கு' ஒரு தனித்துவமான சாளரமாக இவை இருக்கின்றன. நமது ஆழ்ந்த அச்சங்கள், ஆசைகள், மற்றும் பதப்படாத உணர்ச்சிகள் பற்றிய நுண்ணுர்வுகளை வெளிப்படுத்துவதுதான் இத்தகைய 'கனவு'.

கனவை மொழி அழகு தமிழ் என்ன சொல்கிறது என்பதை காண்போம் இதற்கு ஒலிப்பு, சொப்பனம் என சொல்லலாம். இதன் பொருள் தூக்கத்தில் மன திரையில் எழும் காட்சி.

திருக்குறள்: காதலர் தூதொடு வந்த கனவினுக்கு

யாது செய் வேன்கொல் விருந்து

கயலுன்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு

உயலுண்மை சாற்றுவேன் மன்

யான் விரும்பும்போது என் கண்கள் தூங்குமானால் கனவில் வந்து தோன்றும் காதலர்க்கு யான் தப்பி பிழைத்திருக்கும் தன்மையை சொல்வேன்.– மு.வரதராசன்

கனவை பல்வேறு சொல் வளப்படுத்தினால், ஊமையன் கனவு, இன்ப கனவு லட்சிய கனவு, துன்ப கனவு,

உங்கள் கனவு "நனவு" ஆகட்டும்: நனவு– விழிப்பு,நினைவு (சிலப்பதிகாரம் நனவு போல் நள்ளிரவுயாமத்து கனவு கண்டேன் கடிதீங் குறுமென")

பேச்சு வழக்கில் "கனா"

நம் மனித வாழ்க்கையில் கனவு தரும் நம்பிக்கைகள் என்ன சொல்கின்றன?

கனவில் வரும் நிகழ்வின் அடிப்படையில் நல்ல கனவு கெட்ட கனவு என பிரிக்கப்படுகிறது.

இதில் நேர்மறையான நம்பிக்கைகள் கூட மனிதரிடத்தில் வழங்கப்பட்டு வருகிறது அதாவது கெட்ட கனவாய் இருந்தால் வெளிப்படும் நிகழ்வு நன்மையையும், நல்ல கனவு 'தீய நிகழ்வை' நடத்தும் என்னும் நம்பிக்கையும் உண்டு.

உளவியல் அறிஞர் "சிக்மண்ட் பிராய்ட்" ஆய்வுகள் பெரும்பாலும் கனவுகளை பற்றிய அடிப்படை கொண்டவையே.

கனவு பற்றிய நம்பிக்கைகளை சிலது கொடுக்கப்பட்டுள்ளது, இவைகளை பற்றிய எந்த தனிப்பட்ட எண்ணமும் கட்டுரையாளருக்கு இல்லை என்றாலும் கட்டுரை தரும் தகவலாக இதை கருத்தில் கொள்ளலாம்.

ஏர் உழுவதாக கனவு கண்டால் எடுத்த காரியம் தாமதமாகும்

திருமணம் பற்றிய கனவு கண்டால் தீயது நடக்கும்

கனவில் தாமே இறந்து விட்டதாக கனவு கண்டால் ஆயுள் பெருகும்

மரணத்தை கனவில் கண்டால் சுகமாகும்

இறந்தோர் வந்து கனவில் அழைத்தால் மரணம் வரும்

நல்ல கனவு கண்டு விழித்தால் பின் தூங்க கூடாது.

இன்னும் நிறைய நம்பிக்கைகளை நாம் வழக்கத்தில் வைத்திருக்கிறோம்.

கனவுகள் சொல்லும் ரகசியங்கள்

ஒருவருடைய கனவுக்கு ஒரு 'காரணி' இருக்கலாம், அல்லது பல 'காரணிகள்' இருக்கலாம், கனவு காண்பவருடைய 'அடிமனம்' வரை தெரிந்தால்தான் கனவின் அர்த்தத்தை கூறமுடியும். கனவுகள் என்பது நாம் நடக்க வேண்டுமென்று நினைப்பது மட்டுமல்ல, செய்ய தவறிய, அல்லது அதை அறியாமல் கூட இருப்பது, இவற்றை கனவுகள் நமக்கு நினைவுபடுத்தலாம். அல்லது ஒரு சம்பவத்தின் ஆசைகள், உணர்வுகளாக கூட இருக்கலாம்.

"கீற்று" இலக்கிய இதழில் ஒரு கட்டுரை "கனவை பற்றி இப்படி சொல்கிறது"

உடல், மனம், மற்றும் உயிர் ஆகியவை சங்கேதமாக தொடர்பு கொள்ளும் சூழலையே 'கனவு' என்கிறோம்.

கனவுகள் ஏன் நீண்ட காலம் நினைவில் இருப்பதில்லை என்பதற்கும் இந்த கட்டுரை ஒரு விளக்கம் கொடுக்கிறது, கனவு காணும் போது மூளையில் நார் அட்ரீனல், மற்றும் செரடோன்களின் அளவுகள் வீழ்ச்சி அடைகின்றன, இதனால் நினைவில் அதிகம் வைத்து கொள்ளமுடிவதில்லை என்கிறது.

எது எப்படி இருப்பினும் கனவை பற்றி அறிவியல் பூர்வமாகவோ அல்லது நம்பிக்கை சார்ந்தோ பலரும் பலவிதமாக குறிப்பிட்டாலும் நம்மை பொருத்தவரை மனித வாழ்க்கையில் நம்மை ஒரு சில நேரங்களில் தூண்டும் உணர்வுகளாகவும், சில நேரங்களில் துன்படுத்தும் உணர்வுகளாகவும் இருக்கிறது. அப்படி இருந்தால் தான் "கனவு" என்பது நமக்கு சுவாரசியமானதாக இருக்கிறது என்பதில் என்ன சந்தேகம்?

# யாழில் தேர்தல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், நவ 14

யாழ்ப்பாணம் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் தேர்தல் கடமையில் இருந்த 32 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் வட்டுக்கோட்டையை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர். (ஐ)

# முதலாவது தேர்தல் முடிவு: தேர்தல்கள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிவித்தல்

கொழும்பு, நவ 14

2024 நாடாளுமன்றத் தேர்தலின் முதல் தேர்தல் முடிவுகள் இரவு 10 மணிக்கு வெளியாகும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கான வாக்களிப்பு நாடு முழுவதும் உள்ள 13,314 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நிறைவடையும்.

முதல் தபால் வாக்குகள் எண்ணும் பணி மாலை 5 மணிக்கு ஆரம்பிக்க உள்ளது. இந்தத் தேர்தலில் 8,888 வேட்பாளர்கள் போட்டியிடுவதோடு 17,140,354 நபர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வாக்குச் சாவடியில் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றிய அநுர!

கொழும்பு, நவ 14

10வது நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு (இன்று) காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆர்ப்பரிப்பின்றி வாக்குச் சாவடியில் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளார்.

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிவுறுத்தலுக்கு இணங்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாக்களித்த புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எமது ஊடகத்தில் பிற்பகல் நான்கு மணிக்கு நீங்கள் பார்வையிடலாம் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

# தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் பணியாற்றிய பெண் அதிகாரி மரணம்

கொழும்பு, நவ 14

கொழும்பு, கெஸ்பேவ, பொல்ஹேன பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலைய அதிகாரியாக கடமையாற்றிய பெண் ஒருவர் திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயாகல இந்துருவகொடவில் வசிக்கும் சாமிகா ருவானி லியனகே என்ற 48 வயதுடைய திருமணமாகாத பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு புதுக்கடை மேல் நீதிமன்றில் கடமையாற்றும் இப்பெண் நேற்று காலை வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை ஆரம்பித்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணுடன் மேலும் 15 பெண் அதிகாரிகளும் பணியில் இருந்துள்ளனர். இரவு 7.40 மணியளவில் ஒரு அறையில் தங்கியிருந்தபோது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.

உடனடியாக அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை சிகிச்சைக்காக பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். (ஐ)





# வடக்கில் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் வீசப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்கள்

யாழ்ப்பாணம், நவ 14

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் பல பகுதிகளில் வேட்பாளர்களின் துண்டுப்பிரசுரங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் வீசப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான வாக்களிப்பு நடவடிக்கைகள் இன்றையதினம் சுமுகமாக இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் வவுனியா உள்ளிட்ட பகுதிகளில் வேட்பாளரின் துண்டுப்பிரசுரங்கள் வாக்குச்சாவடிகளுக்கு முன்பாக வீசப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்ற தேர்தல் இன்றைய தினம் காலை ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரையில் அமைதியான முறையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வாக்களிப்பு நிலையங்கள் மீது தாக்குதல் முயற்சி மறுக்கும் தேர்தல் ஆணைக்குழு



வெளியான தகவல் உண்மைக்கு புறம்பானவை என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஆணையாளர் நாயகம் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் வாக்களிப்பு மிகவும் அமைதியான முறையில் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரமான மற்றும் அமைதியான வாக்கெடுப்பை சகித்துக்கொள்ள முடியாத சிலர் இவ்வாறான பொய்யான அறிக்கைகளை வெளியிடுவதாக ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பொய்யான கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் ஆணையாளர் முலும் தெரித்துள்ளார். (ஐ)



# சூடுபறக்கும் இலங்கை பொதுத்தேர்தல்: மக்களின் முக்கியப் பிரச்சினை என்ன?

இலங்கையின் 17.1 மில்லியன் வாக்காளர்கள் புதிய அதிபரைத் தேர்ந்தெடுத்து ஏழு வாரங்களுக்குப் பிறகு, நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க மீண்டும் வாக்

வாக்குப்பதிவு இலங்கை நேரப்படி 07:00 மணிக்கு தொடங்கி 16:00 வரை நீடிக்கும். வாக்கு எண்ணிக்கை மாலையில் தொடங்கி வெள்ளிக்கிழமை முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூர் நேரப்படி 10 மணி நிலவரப்படி, 20-25% வாக்குகள் பதிவாகியுள்ளன.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 இடங்களில் 196 உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மீதமுள்ளவர்கள் விகிதாசார பிரதிநிதித்துவம் எனப்படும் வாக்குகளின் சதவீதத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளால் பரிந்துரைக்கப்படும்.



"49 அரசியல் கட்சிகள் மற்றும் 284 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8,800 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர், ஆனால் சுமார் 1,000 வேட்பாளர்கள் மட்டுமே தீவிரமாக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்" என்று தேர்தல் கண்காணிப்பு குழுவான மக்கள் நடவடிக்கைக்கான சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலின் நிர்வாக இயக்குனர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்ட பிறகு, பழைய அமைச்சரவை கலைக்கப்பட்டு, மூன்று அமைச்சர்களை மாத்திரம் வைத்து புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டு தினசரி பணிகள் நடைபெற்று வந்தன.

ஜனாதிபதித் தேர்தலிலும் சரி, இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் சரி, பொருளாதார மீட்சி, ஊழல் ஒழிப்பு, ஒரு மாறுபட்ட அரசியல் கலாசாரம் ஆகியவையே முக்கியமான விஷயங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து, சற்றே மீண்டும் வந்திருக்கும் இலங்கையில் பொருளாதார மேம்பட்டு, விலைகள் குறைய வேண்டும் என்பது தான் மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாக இருந்து வருகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இன்று வரையில் கடன் நெருக்கடியில்தான் இருக்கிறது. சர்வதேச நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் வரவிற்குள் செலவைக் கட்டுப்படுத்துவதோடு, அந்நிய செலாவணிக் கையிருப்பையும் அதிகரித்தாக வேண்டும்.

இப்படியாக இலங்கையின் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு எதிர்பார்ப்பு காணப்பட்டு வருகிறது.

மேலும் வாக்குப் பதிவு மாலை நான்கு மணியளவில் முடிந்துவுடன், வாக்குப் பெட்டிகள் வாக்கு எண்ணும் மையங்களுக்குக் கொண்டு செல்லப்படும்.




வாக்கு எண்ணும் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட்ட, அடுத்த நாள் பிற்பகலுக்குள் பெரும்பாலான வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அமெரிக்காவின் வெளியுறவுதுறைத்துறை செயலாளரை நியமித்தார் ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளடொனால்ட்டிரம்புளோரிடா மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 53 வயதான மார்கோ ரூபியோவைஅந்நாட்டின் வெளியுறவுத்துறை செயலாளராக தேர்வு செய்துள்ளார்.

ரூபியோ 2010 முதல் செனட் சபை உறுப்பினராக இருந்து வருகிறார். மார்கோ ரூபியோ டிரம்பின் நெருங்கிய நண்பரும் ஆவார்.

2024 ஜனாதிபதி தேர்தலில், துணை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போட்டியாளராக ரூபியோவும் இருந்தார். இருப்பினும், துணை ஜனாதிபதியாக ஜே.டி. வேன்ஸ்நியமிக்கப்பட்டார்.



மார்கோ ரூபியோ, லத்தீன் வம்சாவளியைச் சேர்ந்தவர், இந்த நியமனத்தின் மூலம் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளராக பதவி வகிக்கும் முதல் லத்தீன் ஆவார்.

ட்ரம்பின் உயர்மட்ட அரசாங்க நியமனங்கள் அனைத்தும் காங்கிரஸால் அங்கீகரிக்கப்பட வேண்டும். டிரம்பின் குடியரசுக் கட்சியினர் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் ஆகியவற்றின் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளனர். எனவே, டிரம்பின் முடிவுகளுக்கு எந்த ஆட்சேபனையும் இருக்காது என தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை,டிரம்ப், தனதுநெருங்கிய தோழிகளில்ஒருவரான துளசி கபார்டை அமெரிக்கதேசிய புலனாய்வு அமைப்பின் தலைவராக நியமித்துள்ளார்.

டிரம்பின் குடியரசுக் கட்சியில் உறுப்பினராவதற்கு முன்பு, 43 வயதான துளசி கபார்ட், ஜனநாயகக் கட்சியில் உறுப்பினராக இருந்தார். இந்த 2024 ஜனாதிபதி தேர்தலில் அவர் டிரம்புடன் கைகோர்த்தார்.

உக்ரைனில் நடந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா அளித்த ஆதரவை எதிர்த்து தொடர்ந்து போராட்டம் நடத்திய அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினராக பிரபல மானவர் துளசி. துளசி கபார்ட் அமெரிக்க இராணுவத்தில் மேலதிகபட்டாலியன் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இதனிடையே அமெரிக்க சட்டமா அதிபர் பதவிக்கு ட்ரம்ப் தனக்கு நெருக்கமானவரும் குடியரசு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரஸ் உறுப்பினருமான 42 வயதான மேட் கேட்ஸை தேர்வு செய்துள்ளார். அதன்படி, அமெரிக்க சட்டத்துறையின் தலைவராக மேட் கேட்ஸ் இருப்பார்.

Orient Finance
A Janashakthi Group Company
நிறுவனத்திலிருந்து நிலையான வைப்புகளிற்கு விசேட வட்டி விகிதம்.
தொடர்புகளிற்கு
0770235816 / 0774747278
No:550, Hospital Road,Jaffna

பசுமை PASUMAI
பசுமை உயிர் உரம்
• பயிர்காப்பரண்
• வேர்ப்புழுகாப்பரண்
• பயிர் சிற்றரண்
• பூச்சி விரட்டி
• தழைச்சத்து ஊக்கி
• பயிர்காப்பு அஸ்திரம்
• பயிர் வீர அஸ்திரம்
• உக்கல் ஊக்கி
• திறமி கரைசல்
• தெங்கு உயிர்
• தெங்கு காப்பரண்
• தெங்கு சிற்றரண்
• தோட்ட உயிர்
• சாம்பல்சத்து ஊக்கி
• வேர் ஊக்கி
• வேர் முழச்சு ஊக்கி
• மணிச்சத்து ஊக்கி
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
கற்பகவனம் அலுவலகம்
68, குறோசெட் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
+94 787 404 404

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது kmஇல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2024 இல் வெளியிடப்பெற்றது.